**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்**: 529 **நாள்**: 01.10.2026

**பெருநகர சென்னை மாநகராட்சியில் 2026-27 நடப்பு நிதி ஆண்டின் முதல் அரையாண்டில் சொத்துவரி ரூ.1,124.69 கோடியும், தொழில் வரி ரூ.312.06 கோடியும் வசூலிக்கப்பட்டுள்ளது.**

**கடந்த ஆண்டைக் காட்டிலும் வரிவசூல் விகிதம் முறையே 12.95 சதவீதம் மற்றும் 6.89 சதவீதம் அதிகமாக வசூலிக்கப்பட்டுள்ளது.**

**மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

பெருநகர சென்னை மாநகராட்சியின் பிரதான வருவாய் இனங்களில் சொத்துவரி மற்றும் தொழில்வரி உள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 2026-27 நடப்பு நிதி ஆண்டின் முதல் அரையாண்டில் (1/2026-27) சொத்துவரியாக ரூ.1,124.69 கோடியும், தொழில் வரியாக ரூ.312.06 கோடியும் வசூலிக்கப்பட்டுள்ளது. சொத்துவரியினை 9.20 இலட்சம் சொத்து உரிமையாளர்களும், தொழில்வரியினை 45 ஆயிரம் வணிகர் மற்றும் தனிநபர்களும் முழுமையாக செலுத்தியுள்ளனர்.

மேற்படி முதலாம் அரையாண்டில் வசூலிக்கப்பட்ட சொத்துவரி மற்றும் தொழில்வரி தொகையானது கடந்த ஆண்டின் வரிவசூலினை காட்டிலும் வளர்ச்சி விகிதம் முறையே 12.95 சதவீதம் மற்றும் 6.89 சதவீதம் அதிகமாக வசூலிக்கப்பட்டுள்ளது. இது மாநகராட்சியின் சாதனையாக கருதப்படுகிறது.

முதலாம் அரையாண்டின் இறுதி நாளான 30.09.2026 அன்று மட்டுமே சொத்து வரி வசூல் ரூ.50.26 கோடி மற்றும் தொழில்வரி வசூல் ரூ.45.94 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட வளர்ச்சியானது முறையான அலுவலர்களின் கண்காணிப்பு, களஆய்வில் நுண்ணிய மதிப்பாய்வு மற்றும் அலுவலர்களுக்கு உரிய திட்டங்கள் வகுத்து பகிர்ந்தளித்ததன் மூலமாகவும், கடந்த ஜூலை மாதம் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு தீவிர வசூல் மூலமாகவும், நிர்ணயிக்கப்பட்ட இலக்கானது, பெருநகர சென்னை மாநகராட்சியால் வசூலிக்கப்பட்டுள்ளது.

சொத்துவரி மற்றும் தொழில் வரியினை உரிய காலத்தில் செலுத்தி, பெருநகர சென்னை மாநகராட்சி கட்டமைப்பு பணிகளுக்கு உதவிய பொதுமக்களுக்கு பெருநகர சென்னை மாநகரட்சியின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**

**GREATER CHENNAI CORPORATION**

**PRESS RELEASE**

**P.R.No. 529** **Date : 01.10.2026**

The Greater Chennai Corporation (GCC) has recorded a historic Property Tax and Professional Tax Collection in the 1st Half Year of 2026-27. Between 01.04.2026 and 30.09.2026, GCC has collected Rs.1,124.69 Crore in Property Tax and Rs.312.06 Crores in Profession Tax, indicating a growth rate of 12.95% in Property Tax and 6.89% in Professional Tax, when compared to 1st Half Year 2025-26.

Further, property tax has been paid in full by 9.20 Lakh assessees and Professional tax has been paid in full by 45 thousand assessees. On 30.09.2026 alone, GCC has collected Rs.50.26 Crore and Rs.45.94 Crore from Property tax and Profession tax respectively.

This achievement was driven by regular monitoring and review, micro level tax collection plans and a special intensive tax collection drive carried out in July 2026.

GCC extends sincere gratitude to all the taxpayers of Chennai, who have supported GCC and promptly paid their tax dues.

**Issued by : Joint Director/Public Relations Officer**
**Greater Chennai Corporation**